நீட்டிக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட

# வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத் திட்டம்

உள்ளூர் ஊழியர்களின் ஆட்சேர்ப்பைத் துரிதப்படுத்த, முதலாளிகளுக்குக் கூடுதலாக **$5.2 பில்லியன்**

**புதிதாக வேலைக்குச் சேர்க்கப்படும் உள்ளூர் ஊழியர்கள் அனைவருக்கும்**

## 1 புதிதாக வேலைக்குச் சேர்க்கப்படும் உள்ளூர் ஊழியர்களின் தகுதிபெறும் காலகட்டம் 7 மாதங்களுக்கு நீட்டிப்பு

**தகுதி சாளரம்:**

Sep '20 — Feb '21 — 7 மாதங்கள் நீட்டிப்பு — Sep '21 (புதியது)

**தகுதி நிபந்தனை:** முதலாளிகள் தங்களது உள்ளூர் ஊழியர்களின் எண்ணிக்கை, மாதத்திற்குக் குறைந்தது $1,400 சம்பாதிக்கும் உள்ளூர் ஊழியர்களின் எண்ணிக்கை ஆகிய இரண்டையும் உயர்த்தவேண்டும்*

* மார்ச் 2021-க்கும் செப்டம்பர் 2021-க்கும் இடையில் உள்ளூர் ஊழியர்களைப் புதிதாக வேலைக்குச் சேர்க்கும் முதலாளிகளுக்கான அடிநிலையும் வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத்தொகை சரியாக்கமும் பிப்ரவரி 2021-க்கு (ஆகஸ்ட் 2020-க்குப் பதிலாக) மாற்றப்படும்

**12 மாதங்கள் வரை கிடைக்கும் 25% சம்பள ஆதரவுடன், தகுதிபெறும் முதலாளிகள், வேலைக்குச் சேர்க்கப்படும் முதிர்ச்சியடையாத ஊழியர் ஒவ்வொருவருக்கும் தொடர்ந்து $15,000 வரை பெறலாம்**

**வேலைக்குச் சேர்க்கப்படும் அனைத்து முதிர்ச்சியடைந்த உள்ளூர் ஊழியர்கள் (40 வயதிற்கும் மேற்பட்டோர்), உடற்குறையுள்ளோர், முன்னாள் குற்றவாளிகள்**

## 2 சம்பள ஆதரவுக்கான காலகட்டம், 6 மாதம் வரை நீட்டிப்பு

**வேலைக்குச் சேர்க்கப்பட்ட மாதத்திலிருந்து, 12 முதல் 18 மாதம் வரை சம்பள ஆதரவு**

செப்டம்பர் 2020 முதல் பிப்ரவரி 2021 வரை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களுக்காக ஏற்கனவே வேலை உருவாக்கத்திற்கான ஊக்குவிப்புத்தொகை பெறும் முதலாளிகளுக்கும் பொருந்தும்

## 3 ஆதரவுக்குத் தகுதிபெறும் மொத்த மாதாந்தர சம்பள வரம்பு, $5,000-இலிருந்து முதல் $6,000-க்கு அதிகரிப்பு

இத்தகைய ஊழியர்களை செப்டம்பர் 2020 முதல் பிப்ரவரி 2021 வரை வேலைக்குச் சேர்த்துக்கொண்ட, தகுதிபெறும் முதலாளிகள், மார்ச் 2021 முதல் கொடுக்கப்படும் சம்பளங்களின் பேரில் வழங்கப்படும் அதிகரிக்கப்பட்ட மொத்த மாதாந்திர சம்பள வரம்பினால் பயன்பெறுவர்

**18 மாதம் வரை கிடைக்கும் 50% சம்பள ஆதரவுடன், தகுதிபெறும் முதலாளிகள், வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் இத்தகைய ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும், $54,000 வரை பெறலாம்**

MOF MINISTRY OF FINANCE SINGAPORE

gov.sg

மேலும் படிக்க go.gov.sg/jgi

BUDGET 2021

Version as of 16 Mar 2021